SGSECURE

STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

# வேலையிடங்களுக்கான எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) வழிகாட்டி

## பயங்கரவாதத்துக்கு எதிரான தயார்நிலையை உயர்த்துவதற்கு

ஒரு கூட்டு பங்கெடுப்பு

ntuc National Trades Union Congress

SNEF

MINISTRY OF MANPOWER

MINISTRY OF HOME AFFAIRS

SINGAPORE BUSINESS FEDERATION Apex Business Chamber

CSA SINGAPORE

WSHCOUNCIL

வேலையிடங்களுக்கான எஸ்ஜி பாதுகாப்பு (SGSECURE) | மனிதவள அமைச்சு | 2017
இணையத்தளம்: www.mom.gov.sg/sgsecure
மின்னஞ்சல்: sgsecure_workplaces@mom.gov.sg

# உள்ளடக்கம்


## எஸ்ஜி பாதுகாப்பில் (SGSecure) உங்களின் பங்கு

- நீங்கள் ஏன் இன்றே செயல்பட வேண்டும் 2
- மனிதவள அமைச்சரிடமிருந்து ஒரு முக்கியச் செய்தி 3
- 3பி (3Ps) முறையை நடைமுறைப்படுத்துவது 4

## 01 உங்களது ஊழியர் அணியைத் தயார்ப்படுத்துங்கள்

- உங்களின் ஊழியர்களுக்கு பயிற்சி அளித்திடுங்கள் 8
- உயிர்காப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு குழுவை அமைத்திடுங்கள் 11
- ஒன்றிணைந்த ஊழியர் அணியை அமைத்திடுங்கள் 12

## 02 உங்களின் வேலையிடத்தைப் பாதுகாத்திடுங்கள்

- உங்களின் பாதுகாப்பு இடர்களைக் கையாளுங்கள் 16
- தொழில் நீடிப்புநிலைக்கு முன்கூட்டியே திட்டமிடுங்கள் 18
- உங்களது தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தரவுகளை பாதுகாத்திடுங்கள் 20

## 03 உங்கள் சமூகத்துடன் கூட்டிணைந்து செயல்படுங்கள்

- ஆதரவுக் கட்டமைப்புகளை உருவாக்குங்கள் 24
- உங்களின் தொடர்பு ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளுங்கள் 25
- பங்குள்ள தரப்பினரை அணுகுங்கள் 26

## பயனுள்ள தொடர்பு விவரங்கள் 28

# நீங்கள் ஏன் இன்றே செயல்பட வேண்டும்

பயங்கரவாதத்தை தடுக்கவும் எதிர்கொள்ளவும் நமது சமூகத்தைத் தயார்ப்படுத்தும் ஒரு தேசிய இயக்கமே எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure). ஒரு தாக்குதலால் உங்களின் தொழில் செயல்பாடுகளுக்கு இடையூறு ஏற்படலாம், உங்கள் ஊழியர்கள் வேலைக்கு வராமல் போகலாம், உயிரிழப்புகளும் நேரலாம். தாக்குதல் உங்களுடைய வேலையிடத்தில் நடக்காதிருந்தாலும்கூட நீங்கள் பாதிக்கப்படலாம்.

நெருக்கடிநிலைகளைச் சந்திக்க உங்களது வேலையிடத்தையும், ஊழியர்களையும் தயார்ப்படுத்துவதில் முதலாளிகளாகிய நீங்கள் முக்கிய பங்கு வகிக்கிறீர்கள். கற்றறியும் திறன்களும் நடத்தைகளுமே தயார்நிலையாகும். இதற்கு உங்களின் ஈடுபாடுமிக்க முயற்சி தேவைப்படுகிறது. உங்கள் ஊழியர் அணியைத் தயார்ப்படுத்தவும், உங்களின் வேலையிடத்தைப் பாதுகாக்கவும், உங்கள் சமூகத்துடன் கூட்டிணைந்து செயல்படவும் இன்றே இதைச் செய்திடுங்கள்.

# மனிதவள அமைச்சரிடமிருந்து ஒரு முக்கியச் செய்தி

அன்பார்ந்த முதலாளிகளுக்கு,

பயங்கரவாதத் தாக்குதல் நடந்தால் வேலையிடங்கள் பாதிக்கப்படும். இக்கட்டான தருணங்களை எதிர்கொள்ளக்கூடிய ஆற்றல் நமக்கிருப்பது முக்கியம். நமது ஊழியர் அணி ஒன்றிணைந்து இருப்பதையும், நமது தொழில்கள் சட்டென மீட்சி அடைவதையும், நாம் கூடிய விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்புவதையும் நாம் உறுதி செய்யவேண்டும்.

உங்களின் தயார்நிலையை அதிகரிக்க, உங்களுக்காகவே இந்த SGSecure வழிகாட்டியை நாங்கள் தயார் செய்துள்ளோம். இது பங்காளி அமைப்புகளுடனும், துறைசார்ந்த நிபுணர்களுடனும், உங்களைப் போன்ற தொழில்துறையினருடனும் நடத்தப்பட்ட ஆய்வு மற்றும் கலந்தாலோசனைகளின் விளைவாகத் தயார் செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாத மிரட்டலுக்கு நீங்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்து, பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிரான உங்களின் தயார்நிலையை அதிகரித்துக் கொள்ள இந்த வழிகாட்டியைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். இதில் கொடுக்கப்பட்டுள்ள பொருத்தமான குறிப்புகளை அடையாளம் கண்டு, அவற்றைப் பின்பற்றுவதன் மூலம் நீங்கள் முயற்சியைத் தொடங்கலாம்.

நாம் அனைவரும் விழிப்பாக இருப்போம், ஒற்றுமையாக இருப்போம், தைரியமாக இருப்போம்.

தங்களின் உண்மையுள்ள,
டான் சீ லெங்
மனிதவள அமைச்சர்

# 3பி (3Ps) முறையை நடைமுறைப்படுத்துவது

பயங்கரவாதத்துக்கு எதிரான உங்கள் நிறுவனத்தின் மீள்திறனை மேம்படுத்த வேலையிடத்தில் 3பி அணுகுமுறையைப் பின்பற்றுங்கள்.

## உங்கள் பணியாட்களைத் தயார்படுத்தவும்

உங்களின் ஊழியர்களே உங்களுக்குப் பெரிய சொத்து. நெருக்கடிநிலைகளைத் தடுப்பதற்கும் எதிர்கொள்வதற்கும் தேவையான அறிவாற்றலையும் திறன்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அவர்களைத் தயார்படுத்தவது மிகவும் முக்கியம். தாக்குதல் நடந்தால், தயார்நிலையில் இருக்கும் ஒன்றிணைந்த ஊழியர் அணியினர், உங்களின் தொழில் பாதிப்பைக் குறைத்து விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்ப உதவியாக இருப்பார்கள்.

## உங்களின் வேலையிடத்தைப் பாதுகாத்திடுங்கள்

உங்களின் தொழிலால் நெருக்கடிநிலைகளைச் சமாளிக்க இயல்வதை உறுதிப்படுத்த இடர் நிர்வாகத் திட்டங்களும் தணிப்பு நடவடிக்கைகளும் மிக முக்கியம். இந்நடவடிக் கைகளை எடுப்பதன்மூலம் உங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புகளை தடுக்கவும், குறைக்கவும் முடியும். மேலும், நெருக்கடிநிலைக்குப் பின் உங்களின் தொழிலை மீண்டும் விரைவாகத் துவங்க முடியும்.

## உங்கள் சமூகத்துடன் கூட்டிணைந்து செயல்படுங்கள்

பயங்கரவாதத் தாக்குதலின் தாக்கம் அது நடந்த இடத்திற்கு அப்பாற்பட்ட பாதிப்பையும் ஏற்படுத்தும். உங்களின் பங்காளிகள் பாதிக்கப்பட்டால் உங்களின் தொழில்களும் பாதிக்கப்படலாம். பிரச்சினைகளைக் கூட்டாகச் சமாளிக்க உங்களின் தொழில் சமூகத் தினருடன் ஒரு கட்டமைப்பை உருவாக்குங்கள். வலுவான சமூகக் கட்டமைப்புடன் கண்காணிப்பை மேம்படுத்தி, நெருடிக்கநிலைகளின்போது சட்டென செயல்படக்கூடிய ஆற்றலையும் மேம்படுத்தும்.

# நீங்கள் இப்போது என்ன செய்யலாம்

உங்கள் வேலையிடத்தின் தயார்நிலைப் பயணத்தை 4 எளிய செயற்பாடுகளுடன் இன்றே துவங்குங்கள்.

**செயற்பாடு 01**

உங்களின் எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) பிரதிநிதியைப் பதிவு செய்யுங்கள்

**செயற்பாடு 02**

உங்கள் ஊழியர்கள் அனைவரிடமும் எஸ்ஜி பாதுகாப்பு செயலியை (SGSecure app) பதிவிறக்கம் செய்யச் சொல்லுங்கள்.

**செயற்பாடு 03**

அவசரநிலையில் தப்பிச்செல்லும் வழிகள் பற்றி உங்கள் ஊழியர்களிடம் தெரியப்படுத்துங்கள்

**செயற்பாடு 04**

'ஓடு, ஒளிந்துகொள், தெரியப்படுத்து' மற்றும் 'அழுத்து, கட்டு, தெரியப்படுத்து' ஆலோசனை சுவரொட்டிகளைப் பதிவிறக்கம் செய்து ஊழியர்களின் பார்வையில் படும்படி மாட்டி வையுங்கள்.

# 01





# உங்களது ஊழியர் அணியைத் தயார்ப்படுத்துங்கள்

- உங்களின் ஊழியர்களுக்கு பயிற்சி அளித்திடுங்கள்
- உயிர்காப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு குழுவை அமைத்திடுங்கள்
- ஒன்றிணைந்த ஊழியர் அணியை அமைத்திடுங்கள்

# உங்களின் ஊழியர்களுக்கு பயிற்சி அளித்திடுங்கள்

இதன்வழி, நெருக்கடிநிலைகளில் என்ன செய்ய வேண்டும் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். எஸ்ஜி பாதுகாப்பின் (SGSecure) www.sgsecure.sg இணையத்தளத்தில் கிடைக்கும் இலவச வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- **உங்கள் நிறுவனத்தின் எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) பிரதிநிதியைப் பதிவு செய்யுங்கள்**
  எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) தொடர்பான அண்மைத் தகவல்கள் உங்களின் பிரதிநிதியிடம் தெரிவிக்கப்படும். மேலும், நெருக்கடிநிலைகளின் போது பொறுப் பமைப்புகள் தொடர்பு கொள்ளும் நிறுவனப் பிரதிநிதியாகவும் அவர் இருப்பார்.

> **எப்படி பதிவு செய்வது?**
>
> மனிதவள அமைச்சின் www.mom.gov.sg/sgsecure இணையத்தளத்தில் உங்கள் பிரதிநிதிக்காக எஸ்ஜி பாதுகாப்பு நிறுவனக்கணக்கை (SGSecure CorpPass) தொடங்குங்கள்.

- உங்களது அனைத்து ஊழியர்களையும் எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) கைப்பேசி செயலியைப் பதிவிறக்கம் செய்து கொள்ள ஊக்குவித்திடுங்கள். பேரிடர் அவசரகாலங்களின் போது முக்கிய தகவல்களை அதன் மூலம் அவர்கள் பெறலாம். நெருக்கடிநிலைகளைக் கையாளுவதற்கான பயனுள்ள குறிப்புகளையும் செயலியின் துணையுடன் கற்கலாம்.

- அவசரநிலையின்போது வெளியேறும் வழிகளையும், வேலையிடத்தில் ஒளிந்து கொள்ளக்கூடிய இடங்களையும் பற்றி உங்கள் ஊழியர்களிடம் எடுத்துக் கூறுங்கள். நீங்கள் கட்டடத்தில் வாடகைக்கு இருந்தால், கட்டட நிர்வாகத்திடம் அவசரநிலையில் வெளியேறும் வழியின் வரைபடத்தைக் கேட்டுப்பெறுங்கள்.

- www.sgsecure.sg/resources இணையத்தளத்திலிருந்து ‘ஓடு, ஒளிந்து கொள், தெரியப்படுத்து ’ மற்றும் ‘அழுத்து, கட்டு, தெரியப்படுத்து‘ ஆலோசனை சுவரொட்டிகளைப் பதிவிறக்கம் செய்து, உங்கள் ஊழியர்களுக்கு அனுப்புங்கள். இந்த ஆலோசனை சுவரொட்டிகளை அச்சடித்து உங்கள் வேலையிடத்திலும் ஒட்டி வைக்கலாம்.

SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

## துப்பாக்கி அல்லது ஆயுதங்களுடன் தாக்கப்படும் அரிய சம்பவத்தில்

# ஓடு » ஒளிந்துகொள் » தெரியப்படுத்து



ஆபத்திலிருந்து **ஓடிவிடுங்கள்**. சரணடையவோ அல்லது பேசிப்பார்க்கவோ முயற்சி செய்யாதீர்கள்.



தப்பிச் செல்வதற்கு வழி இல்லாவிட்டால், **ஒளிந்து கொள்ளுங்கள்**.
மறைவான இடத்தை நோக்கிச் சென்று, தாக்குபவர்களின் கண்ணில் படாமல் இருங்கள்.
மிகவும் அமைதியாக இருங்கள். கைத்தொலைபேசியை அமைதி நிலைக்கு மாற்றுங்கள்.



நிலைமை பாதுகாப்பாக இருந்தால், காவல்துறையிடம் **தெரியப்படுத்துங்கள்**. 999 என்ற எண்ணை அழையுங்கள் அல்லது பாதுகாப்பாகப் பேச முடியாவிட்டால் 71999 என்ற எண்ணுக்குக் குறுந்தகவல் அனுப்புங்கள். நீங்கள் இருக்கும் இடம், தாக்குபவர்கள் பற்றிய விவரங்களைத் தெரிவித்திடுங்கள். நீங்கள் **SGSecure** செயலியைப் பயன்படுத்தியும் பொறுப்பதிகாரிகளுக்குத் தகவல் கொடுக்கலாம்.

SGSECURE
STAY ALERT. STAY UNITED. STAY STRONG.

# மாற்றுமுறை முதலுதவித் திறன்கள் (IFAS)

## "இரத்தப்போக்கை நிறுத்துதல்" உயிரைக் காக்கும்

**துப்பாக்கி அல்லது ஆயுதங்களுடன் தாக்கப்படும் அரிய சம்பவத்தில்;**

- தாக்குதல் நிகழும் இடத்தில் நீங்கள் இருந்தால், பாதுகாப்பாக மறைந்து கொள்ளுங்கள்; அதோடு
- மறைந்திருக்கும் வேளையில் யாருக்கேனும் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டால், உங்கள் பக்கம் எந்த கவனத்தையும் ஈர்க்காமல், உபயோகப்படுத்தக்கூடிய பொதுவானப் பொருள்களைக் கொண்டு மாற்றுமுறை முதலுதவி (IFAS) செய்து இரத்தப்போக்கை நிறுத்துங்கள்.

## IFAS: அழுத்து » கட்டு » தெரியப்படுத்து



காயம் உள்ள இடத்தைக் கைகுட்டையாலோ அல்லது துணிவகைகளாலோ **அழுத்திப்** பிடித்து இரத்தப்போக்கை நிறுத்துங்கள்.



இடைவார், கழுத்துக்கச்சு அல்லது கைப்பையின் வார் போன்ற பொருட்களைக் கொண்டு இரத்தப்போக்கின் மேற்பகுதியில் இறுக்கமாகக் **கட்டி** இரத்தப்போக்கை நிறுத்துங்கள்.



சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை அவசரநிலை உதவியாளர்களிடம் காயம் மற்றும் காயத்துக்குக் கட்டுப் போட்ட நேரத்தைப் பற்றிய விவரங்களைத் **தெரியப்படுத்தவும்.**

நாடெங்கிலும் உயிர்காப்பாளர்களை உருவாக்கிடுவோம்

ஒரு சமூகநல முயற்சி: SCDF The Life Saving Force

# உயிர்காப்பாளர்களைத் தேர்ந்தெடுத்து, ஒரு குழுவை அமைத்திடுங்கள்

இக்குழுவில் உயிர்காக்கும் திறன்களும், தேவையான மற்ற திறன்களும் கொண்ட ஊழியர்கள் இடம்பெற்றிருக்கவேண்டும். நெருக்கடிநிலைகளின்போதும் அதற்குப் பிறகும் ஏற்படும் இழப்பையும் சேதத்தையும் குறைக்க இக்குழு உதவும்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- உங்கள் வேலையிடத்தின் பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு கண்காணிப்புக்கு பொறுப்புள்ள ஊழியர் குழுவை அமைத்திடுங்கள். அவர்களைத் தீயணைப்பு, சிபிஆர்/ஏஇடி (CPR/AED) மற்றும் முதலுதவி பயிற்சிகளுக்கு அனுப்புங்கள். இலவச வகுப்புகளின் விவரமறிய, சமூக அவசரகாலத் தயார்நிலை திட்டங்களைப் (Community Emergency Preparedness Programme) பற்றிய இணையப்பக்கத்தை www.scdf.gov.sg என்ற இணையத்தளத்தில் பாருங்கள். சான்றளிக்கப்படும் வகுப்புகள் www.redcross.sg மற்றும் www.stjohn.org.sg ஆகியவற்றில் கிடைக்கும்.

- மனோவியல் முதலுதவித் திறன்களைக் கொண்ட ஊழியர் குழுவுக்குப் பயிற்சி அளித்து தயார்ப்படுத்துங்கள். இக்கட்டான சூழ்நிலைகளைச் சக ஊழியர்கள் சமாளிக்க குழுவால் உதவ முடியும். விவரங்களுக்கு www.redcross.sg இணையத்தளத்தைப் பார்க்கவும்.

# ஒன்றிணைந்த ஊழியர் அணியை அமைத்திடுங்கள்

இதன்வழி, நெருக்கடிநிலைகளில் சக ஊழியர்கள் ஒருவர்மீது மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவரையொருவர் சார்ந்திருக்க முடியும். ஒன்றிணைந்த ஊழியர் அணி தாக்குதலுக்கு எதிரான மீள்திறன் கொண்டு, நெருக்கடிநிலைக்குப் பின் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்பிவிடும்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- உங்கள் ஊழியர்கள் தங்களுக்கு இடையிலான ஒற்றுமைகளைத் தெரிந்து கொள்வதற்கு ஊழியர் அறிமுகச் சந்திப்புகள் அல்லது குழுத்திறன் நடவடிக்கைகள் போன்ற நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

- வேலையிடத்தில் பல இன கலாச்சார விழாக்களைக் கொண்டாட ஊக்கமளித்து ஆதரவளித்திடுங்கள். இது வேலையிடத்தில் பணிபுரியும் பல இனப்பிரிவுகளுக்கு இடையே புரிதலை வலுப்படுத்தும்.

- வேலையிடத்தில் ஏற்படும் மனக்குறைகளுக்கும் பதற்றங்களுக்கும் உடனுக்குடன் தீர்வு காண, கருத்து தெரிவிக்கும் வழிகளை அல்லது மனக்குறைகளைக் கையாளும் செயல்பாடுகளை நிலைநாட்டுங்கள்.



# 02



# உங்களின் வேலையிடத்தைப் பாதுகாத்திடுங்கள்

- உங்களின் பாதுகாப்பு இடர்களைக் கையாளுங்கள்
- தொழில் நீடிப்புநிலைக்கு முன்கூட்டியே திட்டமிடுங்கள்
- உங்களது தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாத்திடுங்கள்

# உங்களின் பாதுகாப்பு இடர்களைக் கையாளுங்கள்

இதன்வழி உங்கள் ஊழியர்களையும் தொழில் வளங்களையும் நல்லவிதமாகப் பாதுகாத்திட முடியும்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- உங்கள் வேலையிடத்தின் பாதுகாப்பு, சுகாதார, இடர்காப்புத் திறன்களை மேம்படுத்த வேலையிடப் பாதுகாப்பு மன்றத்தின் பிஸ் சேஃப் (bizSAFE) திட்டத்தில் பதிவு செய்யுங்கள். உங்கள் வேலையிடத்தின் இடர்காப்பு அபாயங்களை நன்கு மதிப்பிடவும் அவற்றைச் சமாளிக்கவும் உங்களுக்கு உதவும் வகையில், பிஸ் சேஃப் 1 - 3 நிலைகளில் SGSecure பொருளடக்கம் இணைக்கப்பட்டுள்ளது. www.wshc.sg/bizSAFE என்ற இணையத்தளத்தைப் பாருங்கள்.


# தொழில்துறைக்குப் பாதுகாப்பான, சுகாதாரமான, இடர்காப்புமிக்க வேலையிடத்தை உருவாக்குங்கள்.

## பிஸ் சேஃப் (bizSAFE) என்பது என்ன?

பிஸ் சேஃப் திட்டம் 2007-ஆம் ஆண்டு அறிமுகமானது. பிஸ் சேஃப் திட்டத்தின் 5 நிலை அங்கீகரிப்பின் மூலம் நிறுவனங்கள் தங்களின் வேலையிடப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் திறன்களை மேம்படுத்திக்கொள்ள திட்டம் உதவுகிறது.

இன்று, 28,000-க்கும் அதிகமான நிறுவனங்கள் பிஸ் சேஃப் திட்டத்தில் பங்குபெற்றுள்ளன. இது நிறுவனங்களுக்குப் போட்டித்தன்மையில் ஒரு முன்னிலையை வழங்குகிறது. வேலையிடப் பாதுகாப்புக் கழகம் 2013-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வின்படி, பிஸ் சேஃப் திட்டத்தில் இடம்பெறாத நிறுவனங்களைவிட பிஸ் சேஃப் திட்டத்தில் இடம்பெறும் நிறுவனங்கள் வேலையிடப் பாதுகாப்பு, சுகாதார இடர்களைக் கையாள்வதில் அதிக ஆற்றல் பெற்றுள்ளன.

26 செப்டம்பர் 2017 முதல், எஸ்ஜி பாதுகாப்பு உட்கூறுகளை உள்ளடக்கி பிஸ் சேஃப் திட்டத்தின் நிலைகள் 1-3 மேம்படுத்தப்பட்டுள்ளன. இதன்படி, நிறுவனங்கள் பயங்கரவாத மிரட்டலைச் சமாளிக்க உதவும் திட்டத்தை வகுத்து செயல்படுத்த வேண்டும்.




*SGSecure உட்கூறுகள்

## பிஸ் சேஃப் திட்டத்தின் பயன்


I

**9/10** பத்தில் ஒன்பது பிஸ் சேஃப் நிறுவனங்கள் தங்களின் வேலையிடத்தில் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் மேம்படுத்த பிஸ் சேஃப் உதவியது என ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.



II

**89%** வாடிக்கையாளர் நிறுவனங்கள் வருங்கால ஒப்பந்தங்களுக்கு பிஸ் சேஃப் நிறுவனங்களைப் பயன்படுத்த விரும்புகின்றன.




வேலையிடப் பாதுகாப்புக் கழகம் 2013-ஆம் ஆண்டு நடத்திய ஆய்வு முடிவுகளின் மூலம் கண்டறியப்பட்டது

WSHCOUNCIL

மேல் விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்கு **www.wshc.sg/bizsafe** இணையத்தளத்தைப் பார்க்கவும் அல்லது bizSAFE@wshc.sg என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

# தொழில் நீடிப்புநிலைக்கு முன்கூட்டியே திட்டமிடுங்கள்

இதன்வழி, இடர்களாலும் நெருக்கடிநிலைகளாலும் ஏற்படும் தொழில் இடையூறுகளை எதிர்கொள்ளக்கூடிய உங்கள் ஆற்றல் மேம்படும். உங்களின் முக்கிய தொழில் செயல்பாடுகளைக் கண்டறிந்து அதற்குரிய தணிப்பு நடவடிக்கைகளையும் செயல்திட்டங்களையும் தயார் செய்வதன் மூலம் நீங்கள் இதைச் செய்யலாம்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- ISO 22301 தொழில் நீடிப்புநிலை நிர்வாகச் சான்றுக்குப் பதிவு செய்து, இடர்களுக்கு எதிரான தணிப்பு நடவடிக்கைகளையும் இடர்களைக் கையாளுவதற்கான செயல்திட்டங்களையும் வகுத்திடுங்கள். அரசாங்க மானியங்களின் விவரங்கள் www.businessgrants.gov.sg இணையத் தளத்தில் கிடைக்கும்.

- நெருக்கடிநிலைகளில் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதைக் கற்றுக் கொள்ள நெருக்கடிநிலைகளுக்கான தகவல் தொடர்பு வகுப்புகளுக்கு www.bcm.org.sg என்ற தொழில் நீடிப்புநிலை நிர்வாக இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்.

- தொழில் நெருக்கடிநிலை நிர்வாக வகுப்புகளுக்கு www.sbi.org.sg என்ற இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்.

# உங்களின் நிறுவனம் மீள்திறன் மிக்கதா?

பெரும்பாலானவர்கள் தங்களின் நிறுவனங்கள் முற்றிலும் மூடப்படும் நிலையை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களைப் பற்றி நினைப்பதில்லை. எனினும், பின்வரும் சம்பவங்கள் நடந்தால், அவற்றை எதிர்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?



01 வாடிக்கையாளர்களின் தரவுகள் இழப்பு

02 சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவும் பாதகமான செய்திகள்

03 அலுவலகம் அமைந்திருக்கும் முக்கிய கட்டடத்தைச் சென்றடைய முடியவில்லை

04 மின்சாரம் துண்டிப்பு

05 பொது உள்கட்டமைப்பில் தடை

06 அதிக சுகாதாரமற்ற அளவுகளில் காற்றுத் தூய்மைக்கேடு

07 மின்சார விநியோகம் இழப்பு

08 DORSCON மஞ்சள் நிற எச்சரிக்கை நிலையில் தொற்றுநோய்ப் பரவல்

## தொழில் நீடிப்புநிலை நிர்வாகத்தின் பயன்கள்

திடீர் மிரட்டல்கள் அல்லது இடையூறுகளின் போது தொழிலைத் தொடர்வதற்கு, சரியான முறையில் எதிர்கொள்ளும் ஆற்றலே முக்கியம். அவ்வகையான இடையூறுகளுக்குத் தயார் செய்யாமல் இருப்பது, உங்கள் லாபத்தை உடனடியாகப் பாதிப்பதோடு, நீண்ட காலத்தில் உங்கள் நிறுவனத்தின் நற்பெயரையும் பாதிக்கும்.

தொழில் நீடிப்புநிலை நிர்வாகம் (BCM) முழுமையான நிர்வாக முறையை வழங்குகிறது. இது நிறுவனங்களின் மீள்திறனையும், மதிப்பையும் ஆராய்ந்து, திட்டமிட்டு வலுப்படுத்த உதவுகிறது. உங்கள் தொழிலின் நன்மதிப்பையும், நற்பெயரையும், பங்குதாரர்களின் நலனையும் பாதுகாக்க தொழில் நீடிப்புநிலை நிர்வாகம் முனைகிறது.

தொழில் நீடிப்புநிலை நிர்வாகத்துடன் தயார்நிலையில் இருப்பதன்மூலம், 'ஆக மோசமான சம்பவத்தின்போதும்' உங்களின் செயல்பாடுகள் வெகுவாகப் பாதிப்படையாது என்ற உறுதியை உங்களின் உட்புற மற்றும் வெளிப்புற பங்குதாரர்களுக்கு அளிக்க முடியும். இடர்களையும் இடையூறுகளையும் சமாளிப்பதற்கான உத்தியாகத் தொழில் நீடிப்புநிலை நிர்வாக முறையைப் பயன்படுத்து வதோடு, அதிக கெடுபிடியான சட்டத்திட்டங்கள், மனிதவளப் பற்றாக்குறை, முக்கிய விநியோகஸ்தர்கள் அல்லது வாடிக்கையாளர்கள் மீதான சார்புநிலை போன்ற எதிர்பாராத பாதிப்புகளைக் குறைப்பதற்கான உத்தியாகவும் சிங்கப்பூர் நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. ISO 22301:2012 கட்டமைப்பு உங்கள் நிறுவனத்துக்கு அமைப்பு சார்ந்த அணுகுமுறையை அளிக்கிறது. இது நிறுவனத்தின் குறிப்பிட்ட இடர்களை மதிப்பிட்டு, உங்களின் தொழில் நீடிப்புநிலை செயல்பாட்டின் பயன் விளைவைச் சோதிக்கிறது.

B C M Business Continuity Management Focal Point

மூலாதாரம்
*சிங்கப்பூர் தொழில் சம்மேளனத்தின் தொழில் நீடிப்புநிலை நிர்வாக ஆண்டறிக்கை 2016*

# உங்களது தகவல் தொடர்பு சாதனங்கள் மற்றும் தரவுகளைப் பாதுகாத்திடுங்கள்

இதன்வழி, உங்கள் நிறுவனம் இணைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இயல்வதை உறுதி செய்யலாம்.www.csa.gov.sg என்ற இணையத்தளத்தில் GOsafeonline இணையப்பக்கத்துக்குச் சென்று இலவச வளங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- உங்களின் தகவல் தொழில்நுட்பக் கருவிகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும். அனுமதியற்ற பயன்பாட்டைக் கண்காணித்து தடுக்க உதவும் மென்பொருளை நிறுவவும்.

- உங்களின் இயங்குதளம் மற்றும் செயலிகள் தாக்குதலுக்கு இலக்காகாமல் இருக்க, நிவாரணங்கள் (patches) வந்தவுடன் உடனடியாகப் பதிவிறக்கம் செய்யவும்.

- மெல்வேர் (malware) மற்றும் ஃபிஷிங் (phishing) தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள, மல்டி-இன்ஜின் ஆன்டிவைரஸ் ஸ்கேனர் (multi-engine antivirus scanner) கொண்ட அப்ளிகெஷன் கண்ட்ரோல் (Application Control) மென்பொருளை நிறுவவும்.

- உங்கள் தரவுகளைக் கால இடைவேளைகளில் பாதுகாப்பான தளத்தில் பத்திரப்படுத்தி வைத்து (backups) பாதுகாத்துக் கொள்ளவும்.

- பாதுகாப்பான இணையப் பயன்பாட்டுப் பழக்கங்களைப் பின்பற்ற உங்களின் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்து, வேலையிடத்தில் வலுவான இணையப் பாதுகாப்பு பண்பாட்டை ஏற்படுத்தவும்.



# 03






# உங்கள் சமூகத்துடன் கூட்டிணைந்து செயல்படுங்கள்

- ஆதரவுக் கட்டமைப்புகளை உருவாக்குங்கள்
- உங்களின் தொடர்பு ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளுங்கள்
- பங்குள்ள தரப்பினரை அணுகுங்கள்

# ஆதரவுக் கட்டமைப்புகளை உருவாக்குங்கள்

இதன்வழி, உங்களின் சுற்றுவட்டாரத்தில் ஏற்படும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் தாக்குதல்களைக் கண்காணித்து, சமாளிக்கக்கூடிய ஆற்றலை நீங்கள் வளர்த்துக் கொள்ளலாம்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

**சிங்கப்பூர் காவல்துறை மற்றும் சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படையின் பாதுகாப்பு** (Safety and Security Watch Group) **மற்றும் இடர்காப்பு கண்காணிப்புக் குழுத் திட்டத்தில் சேர பதிவு செய்யுங்கள்**

**கட்டட உரிமையாளர்**

உங்களின் எஸ்ஜி பாதுகாப்பு பிரதிநிதி (SGSecure) உங்கள் கட்டடத்தை இத்திட்டத்திற்குப் பதிவு செய்யலாம். நீங்கள் உறுப்பினராகச் சேர்ந்த பிறகு, உங்கள் சுற்றுவட்டாரத்தில் இருக்கும் கட்டட உரிமையாளர்களுடன் பழகி, ஆகச்சீரிய இடர்காப்பு நடைமுறைகளைக் கற்றுக் கொள்ளலாம். உங்கள் கட்டடத்தின் இடர்காப்புக் குழு காவல்துறையுடன் இணைந்து உங்கள் கட்டடத்தின் பாதுகாப்பை ஆய்வு செய்யலாம். www.police.gov.sg இணையத்தளத்தைப் பார்க்கவும்.

**கட்டட வாடகைதாரர்**

பாதுகாப்பு மற்றும் இடர்காப்பு கண்காணிப்புக் குழுத் திட்டத்தில் (Safety and Security Watch Group பங்குபெறுமாறு உங்களின் கட்டட நிர்வாகத்தை ஊக்குவிக்கவும்.

# உங்களின் தொடர்பு ஆற்றலை மேம்படுத்திக் கொள்ளுங்கள்

இதன்வழி, நெருக்கடிநிலைகளின் போது உங்களது நிறுவனம் வேகமாகவும், தீர்க்கமாகவும் செயல்பட முடியும்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- நெருக்கடிநிலைகளின் போது தொடர்பு கொள்ள வசதியாக, ஊழியர்கள் மற்றும் அவர்களின் உறவினர்களின் தொடர்பு எண்கள் கொண்ட பதிவேட்டைத் தயார் செய்யவும்.
- தொடர்பு எண்கள் கொண்ட பதிவேட்டை அடிக்கடி புதுப்பிக்கவும்.
- குழு சார்ந்த தொடர்பு வழிகளுக்கு கைப்பேசி தகவல் செயலிகளைப் பயன்படுத்துங்கள்.

# பங்குள்ள தரப்பினரை அணுகுங்கள்

இதன்வழி, உங்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்திக் கொள்ளலாம். பதற்ற நிலைகளின் போது தவறான தகவல் பரிமாற்றத்தையும் தேவையில்லாத இடையூறுகளையும் தவிர்ப்பதற்கு இது உதவும்.

## இவற்றை நீங்கள் செய்துவிட்டீர்களா?

- முக்கிய வாடிக்கையாளர்கள், விநியோகஸ்தர்கள் போன்ற முக்கிய தரப்பினரின் பட்டியலைத் தயார் செய்து, அவர்களுடன் வலுவான தொடர்பு முறைகளை ஏற்படுத்துங்கள்.

- நெருக்கடிநிலைகளினால் தற்போதைய தொழில் பங்காளிகள் பாதிக்கப்படும் நிலையில், அவர்களுக்கு மாற்றாக உங்களின் தொழில் செயல்பாட்டைத் தொடர உதவும் தொழில் பங்காளிகளின் பட்டியலைத் தயார் செய்யுங்கள்.





# பயனுள்ள தொடர்பு விவரங்கள்

உங்களது நிறுவனத்தில் எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) இயக்கத்தைச் செயல்படுத்த கீழ்க்காணும் வளங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். பயிற்சி வகுப்புகள், தொழில் நீடிப்புநிலை திட்ட முனைப்புகள், பதிவிறக்கம் செய்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக்கூடிய பிற எஸ்ஜி பாதுகாப்பு (SGSecure) தகவல்கள் போன்றவை இவற்றில் அடங்கும்.

| அமைப்பு | அவை வழங்குபவை | வளங்கள் மற்றும் தொடர்புகள் |
|---|---|---|
| உள்துறை அமைச்சு | • இயக்கத்தைப் பற்றி மேலும் தகவல் அறிந்திடுங்கள்<br>• இணையம்வழி கற்கும் பாடத்திட்டங்கள், சுவரொட்டிகள், காணொளிகள், வெளியீடுகள் ஆகியவற்றைப் பெற்றிடுங்கள் | இணையத்தளம்: www.sgsecure.sg |
| மனிதவள அமைச்சு | • உங்களின் எஸ்ஜி பாதுகாப்பு பிரதிநிதியைப் பதிவு செய்யுங்கள்<br>• உங்கள் வேலையிடத்தில் எஸ்ஜி பாதுகாப்பு அமலாக்கம் பற்றி மேல்விவரம் படித்தறிந்திடுங்கள் | இணையத்தளம்: www.mom.gov.sg/sgsecure<br>தொலைபேசி: 6438 5122<br>மின்னஞ்சல்: sgsecure_ workplaces@mom.gov.sg |
| தேசியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் | • உங்கள் ஊழியர்களை நெருக்கடிநிலைக்குத் தயார்ப்படுத்த தொழிற்சங்கங்கள் எவ்வாறு உங்களுடன் இணைந்து செயல்படமுடியும் என்பதைப் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்<br>• எஸ்ஜி பாதுகாப்பு இயக்கத்தில் உங்களது தொழிற்சங்கத் தலைவர்கள் எவ்வாறு பங்காற்ற முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் | இணையத்தளம்: www.ntuc.org.sg<br>தொலைபேசி: 6213 8351<br>மின்னஞ்சல்: ntucird@ntuc.org.sg |
| சிங்கப்பூர் தேசிய முதலாளிகள் சம்மேளனம் | • சிங்கப்பூர் தேசிய முதலாளிகள் சம்மேளனம் ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளின் மூலம் உங்களின் ஊழியர் அணியை எவ்வாறு தயார்ப்படுத்துவது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள் | இணையத்தளம்: www.snef.org.sg<br>தொலைபேசி: 6290 7696<br>மின்னஞ்சல்: advisory@snef.org.sg |

| அமைப்பு | அவை வழங்குபவை | வளங்கள் மற்றும் தொடர்புகள் |
|---|---|---|
| சிங்கப்பூர் காவல்துறை | • SSWG (Safety and Security Watch Group) உறுப்பினராகப் பதிவு செய்யுங்கள் (கட்டட உரிமையாளர்கள் மட்டும்)<br>• இணையம்வழி கற்கும் SGSecure பாடத்திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் | அவசரகால நேரடித் தொலைபேசி: 999<br>அவசரகாலக் குறுந்தகவல்: 71999<br>இணையத்தளம்: www.police.gov.sg/sgsecure<br>அவசரநிலை அல்லாத தொலைபேசி: 1800 - 255 - 0000<br>விவரம் கேட்டறிய (காவல்துறை தலைமையகம்): 1800 - 358 - 0000<br>SSWG மின்னஞ்சல்: spf_sswg@spf.gov.sg |
| சிங்கப்பூர் குடிமைத் தற்காப்புப் படை | • தீயணைப்பு, சிபிஆர்/ஏஇடி (CPR/AED), முதலுதவி ஆகியவற்றில் சமூக அவசர காலத் தயார்நிலை பயிற்சிக்குப் பதிவு செய்யுங்கள் | அவசரகால நேரடித் தொலைபேசி: 995<br>இணையத்தளம்: www.scdf.gov.sg<br><br>வாடிக்கையாளர் சேவை மையம்<br>தொலைபேசி: 1800 - 286 - 5555<br>மின்னஞ்சல்: spf_sswg@spf.gov.sg |
| சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு | • இணையப் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள். இலவச இணையப் பாதுகாப்பு பயிற்சிக் கருவிகளைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் | இணையத்தளம்: www.csa.gov.sg/gosafeonline |
| ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர் | • வேலையிடத்தின் தயார்நிலையை உயர்த்த உதவும் பயன்மிக்கப் பயிற்சி வகுப்புகளுக்கு உங்களின் ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதியைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் | இணையத்தளம்: www.skillsfuture.sg |
| சிங்கப்பூர் தொழில் சம்மேளனம் | • தொழில் நீடிப்புநிலை நிர்வாகச் சான்றிதழ் பெற பதிவு செய்யுங்கள்<br>• நெருக்கடிநிலைத் தொடர்புமுறை போன்ற மற்ற பயன்மிக்க வகுப்புகளுக்குப் பதிவு செய்யுங்கள் | தொழில் நீடிப்புநிலை நிர்வாக இணையத்தளம்: www.bcm.org.sg<br>மின்னஞ்சல்: bcm@sbf.org.sg<br>பயிற்சி வகுப்புகள்: www.sbf.org.sg<br>மானியங்கள்: www.businessgrants.gov.sg |
| வேலையிடப் பாதுகாப்பு, சுகாதார மன்றம் | • பிஸ் சேஃப் திட்டத்துக்குப் பதிவு செய்யுங்கள் | இணையத்தளம்: www.wshc.sg/bizSAFE<br>மின்னஞ்சல்: bizSAFE@wshc.sg |
| சிங்கப்பூர் செஞ்சிலுவை சங்கம் | • அடிப்படை முதலுதவி, மனோவியல் முதலுதவி, முதல் உயிர்காப்பாளர் திட்டம் போன்ற சான்றளிக்கப்படும் பயிற்சி வகுப்புகளுக்குப் பதிவு செய்யுங்கள் | இணையத்தளம்: www.redcross.sg<br>தொலைபேசி: 6664 0563<br>மின்னஞ்சல்: academy@redcross.sg |
| செயிண்ட் ஜான் சிங்கப்பூர் | • அடிப்படை மற்றும் வேலை தொடர்பான முதலுதவி போன்ற சான்றளிக்கப்படும் பயிற்சி வகுப்புகளுக்குப் பதிவு செய்யுங்கள் | இணையத்தளம்: www.stjohn.org.sg<br>தொலைபேசி: 6298 0300<br>மின்னஞ்சல்: firstaid@stjohn.org.sg |